வந்தேமாதரம்!

ஏகாதிபத்திய சீனாவை எதிர்க்கும்

இந்திய வீரப் போர்முரசு

(... பிரச்சார பாடல்கள்)

1962
376
1-63
N62
68459

Copy Right to
Editor.

ஜெயிந்த்!

ஸ்ரீதேவி துதி

பல்லாயிரங்கோடி மக்களோ டொன்றிவாழ
பண்பைவிட்டு
பொல்லாத மண்ணாசைப் பேய்பிடித் துளறிப்
புரட்சிகாட்டும்
வல்லாண்மை மிகுசீன வஞ்சத்தை வீழ்த்திநமை
வாழ்வித்தருள்
நல்லா ளெனும்வீர பாரதத் தாயருளை
நாடுவோமே!

தலைமைப் புகழ்

'சொன்ன சொல்லை மறந்திடலாமா...' என்ற மெட்டு

நமது தேசப் பிதா காந்திக்கி ஜேஜேஜே
அவர்—நாட்டிலே நமக்கு காட்டிமெய்வழிக்கு ,,
அமைதியூட்டிவரும் அவர்கைராட்டைக்கும் ,,
இங்கு-அவருரை கதருடைக்கும் அகிம்சா
முறைக்கும் அன்புக்கும் ,,
தீரன் நமது நேருஆட்சிக்கும் ,,
அவர்-தேசசேவைக்கும் விஸ்வாச நேர்மைக்கும் ,,
வீரமுற்றஅவர் நடுநிலையதற்கும் ,,
நல்-விதரணகுணகலைக்கும் புகழ்வல்லமைக்கும்
வெற்றிக்கும் ,,
சென்னைத் தலைமைக் காமராஜருக்கும் ,,
அவர்-தியாகஉண்மைக்கும் விவேகவன்மைக்கும் ,,
தன்னையுலகுக் களித்தபக்திக்கும் ,,
அவர்-சமரசநேர்வழிக்கும் சத்தியமொழிக்கும்
சாந்திக்கும் ,,

இந்திய வீரப் போர் முரசு

'அச்சமில்லை அச்சமில்லை...' என்ற மெட்டு

வீரமுரசுகொட்டியிறுதி-வெற்றிகாணும்நமதுபோர்
யாரெதிர்த்தபோதினும்-அஞ்சாதுநமதுவீரப்போர்
நேருதலைமையில்முழங்கி-நின்றொலிக்கும்நமதுபோர்
பாரபட்சமின்றிநடக்கும்-பாரதப்போர்நமதுபோர்

நீதிநேர்மைசத்தியமென்ற-நிலையையூட்டும்நமதுபோர்
ஜாதிபேதமன்றி-திரளும்ஜனநாயகவீரப்போர்
கோதிலாதகட்டபொம்மன்-கொந்தளிப்பேநமதுபோர்
ஓதும்பகவத்கீதைசொன்ன-உயர்கருத்தேநமதுபோர்

தருமஞாயப்பெருமைவாய்ந்த-சாத்வீகமேநமதுபோர்
திரமிகுத்தமூவேந்தரை-சேர்ந்தமக்கள்செய்யும்போர்
புறமுதுகாட்டாதெதிர்த்து-புதுமைகண்டநமதுபோர்
அறம்வளர்த்ததமிழ்நாட்டின்-ஆர்வமேநம்வீரப்போர்

காந்தியகிம்சாமுறையில்-கைதேர்ந்ததுநமதுபோர்
ஏந்திபாயும்பீரங்கிக்-கிளைத்தல்லநமதுபோர்
ஓர்ந்துரைத்தபஞ்சசீல-உடன்பாடேநமதுபோர்
சேர்ந்தஉலகநாடுகட்கே-தெரிந்தஉண்மைநமதுபோர்

உடல்கொடுத்தும்பொருள்கொடுத்தும் உயிர்கொடுத்து
முதவும்போர்
கடல்கொதித்தெழுந்தவாறு-காணும்நமதுவீரப்போர்
அடமிகுத்துவலியசண்டைக்-கழைப்பதல்லநமதுபோர்
இடம்பொருளேவல்தெரிந்தேயியங்கும் நமதுவீரப்போர்

தங்கக்குவியலோடுரத்த-தானம்பெற்றதுநமதுபோர்
அங்கபங்கமாயினும்பின்-அடைந்திடாதிவ்வீரப்போர்
சங்கைகெட்டசீனவெறியை-தகர்த்துவீழ்த்தும்நமது
போர்
இங்குசர்வகட்சிமக்களும்-ஏகோபித்தெழுந்தபோர்

எல்லைகடந்துநாடுபிடிக்க-யெழுவதல்லநமதுபோர்
தொல்லையூட்டும்சீனப்பேயை-தொலைத்துக்கட்டும்வீரப்
நல்லபிள்ளைபோலபேசி-நடிப்பதல்லநமதுபோர் [போர்
சொல்லைச்செயலில்-காட்டியோடத்துரத்துவிக்கும்
வீரப்போர்

தமிழனொருவனிருக்கும்-வரையும்சளைத்திடாது
நமதுபோர்
சமநிலையேமெய்மையென்று-சாதிக்கும்நம்வீரப்போர்
அமைதியானமுறைதனையே-ஆதரிக்கும்நமதுபோர்
இமயமுதல்குமரிவரை-யெதிர்த்தியங்கும்நமதுபோர்

வீட்டிற்கொருவராய்த்துணிந்து வீறுகொண்டெழுந்த
போர்
வெற்றியல்லதுவீரமரணம்—வேண்டிநிற்பதுநமதுபோர்
காட்டினில்பலபிரிவினையாய்க்காணும்நமதுமக்கள்போர்
கவிமழைராஜாஷண்முகன்-கழறுந்தேசத்தியாகப்போர்

போர்! போர்!! போர்!!!

சீனுவின் திகடுதத்தம்

'அல்லாவின் கருணையாலே...' என்ற மெட்டு

வல்லாண்மை கொண்டு வீணே
வம்பாடுஞ் சீனப் பேயை
மல்லாடிக் கொன்றின் னுட்டின்
மாண் பிணைக்காக்க யின்றே!

(பாட்டு)

எல்லாருந் திரண்டு வொன்றாக நிமிர்ந்து
எழுங்கள்! எழுங்கள்! எழுங்கள்!
போர் முனைக்கி (எ)

செல்லாத மூன்று திட்டங்களைக் காட்டி
சீனு திகடுதத்தம் பண்ணுகிறது—அதைச்
சரியென வொப்பினால் கிடைத்ததை முழுங்கி
செமித்திடலா மென்று யெண்ணுகிறது—இது
பொல்லாத சூழ்ச்சி எல்லைக்கடந்தாச்சி
எழுங்கள்! எழுங்கள்! எழுங்கள்!
போர் முனைக்கி (எ)

தானே சண்டையை யிழுத்து முன்னேறி யிப்போ
சமாதானவுட்டு விடுவானேன்?—ஏதோ!
சந்தேகப்படுது தந்திர மிருக்குது
சளைத்தவர் போல் பின்னடைவானேன்? இது
வீணனஏய்ப்பு வெறுங் கட்டுக்கோப்பு!
எழுங்கள்! எழுங்கள்! எழுங்கள்!
போர் முனைக்கி (எ)

இடங்களைப் பிடித்திட்ட தால வரை வலிய
இந்தியா போயெதையுங் கேட்டிட்டதா? இல்லை
என்ன யிதனருத்தம் எதற்கு போர் நிறுத்தம்
எதுக்கு நம்வீர முரசுரட்டிட்டதா?-கெட்ட
அடங்கொண்ட சீனப்பேய் ஆக்றமிப்பை யொழிக்க
எழுங்கள்! எழுங்கள்! எழுங்கள்!
போர் முனைக்கி (எ)

தோளின் மீதிருந்தே செவியைக் கடித்திடும்
துரோகியை பழிக்கிப்பழி வாங்கிடணும்—இதில்
சோர்வுகூடாது வீராவேசத்துடன்
துணித்துக், குவியலாய்க் குவித்திடணும்—வீரக்
காளிவேஷம் போட்டு குடலைக்கவ்விடணும்
எழுங்கள்! எழுங்கள்! எழுங்கள்!
போர் முனைக்கி (எ)

மேருக்கு நிகர்த்தநம் நேருவிடமா அவர்
மிரட்டி வருசைகளைக் காட்டுகிறது? பாவம்
மெத்தன புத்தியில்தான் பித்தந்தலைக்கேறி
மெய்மறந்தது வாலை நீட்டுகிறது—இது
வேறுக்குள்ளே புழுவு வெட்டித்தகர்த்தெறிய
எழுங்கள்! எழுங்கள்! எழுங்கள்!
போர் முனைக்கி (எ)

பாரத நாட்டிலப் பழியரை விடுவது
பண்டய விதிக்கிநேர் முரணாகும்—இன்னும்
பக்த்தியற்றுப்போகும் புத்திகெட்டுச் சாகும்
பண்புநெரியெல்லாமே பறிபோகும்—அதனால்
வீரநடை போட்டு வீட்டுக்கொருவராய்
எழுங்கள்! எழுங்கள்! எழுங்கள்!
போர் முனைக்கி (எ)

பாரதநாட்டுப் படை பராக்ரமம்

'மணப்பாரை மாடுகட்டி' என்ற மெட்டு

கெஜல்

நன்றிமறந்துகெட்ட நாஸ்திகனை–பொதுவாழ்க்கைக்கி
நயவஞ்சகம் விளைக்கும் சண்டாளனை
கொன்றுநா மவருடலைக் கழுகுகாக்கைக்
கூட்டத்திற்கு சூறையிடத் தலைநிமிர்ந்து

(பாட்டு)

அணியணியாகத்திரண்டு ஆருவங்கறைபுரண்டு
துணிபுகொண் டெழுந்தெதிர்த்து தாக்கிடுவோம்
[சொன்ன
சொல்தவறிய துரோகியை வெளியாக்கிடுவோம்

பாம்புநத்தைப் பல்லிதின்னும் பாழுஞ்சீன ராக்ஷதன்
வீம்புக்கின்றேவோர்முடிவுகட்டிடுவோம்-இழந்த [செய்
விடங்களைக்கை பற்றிவேலி நட்டிடுவோம்

இனியிந்தியா ஞாபகமே யேற்படாமலவர்கனவின்
நினைவுக்குகொடும்பாவிகட்டி யெரித்திடுவோம்!—அந்த
நிர்மூடக் குலத்தைக் கருவறுத்திடுவோம்

இமயமுதல்குமரிவரை இந்தியாவின் யெல்லையென்று
மமதைகொண்டமடையர்தெரியச்செய்திடுவோம்-அவர்
மண்டைகளில் குண்டுமாறி பெய்திடுவோம்

அமெரிக்கா பிருட்டனும்நல் லாசியஆப் பிரிக்காமுதல்
நமக்குதவி யிருக்குதெதற்கும் பின்வாங்கோம்—நமது
நாட்டுக்கெவர் தீங்குசெய்தாலுந் தாங்கோம்!

ஆவியோடு காலமழிந் தாலும்விட மாட்டோமந்தப்
பாவிதனைக்கொன்று கொலவைபோட்டிடுவோம்-செய்த
பழிக்கிப்பழி வாங்கியே கொடி நாட்டிடுவோம்

சீனுவின் நரித் தந்திரம்

தனு தான தான னுனனு-தானு, தனன
தன தன, தன தான னுன்னு-என்ற சந்தம்-தாளம் ஏகம்

சமாதானப் பாட்டுப் பாடுது—சீனுநம்மிடம்
சடுகுடு விளையாட்டு ஆடுது
கமால் வித்தைக் காட்டி நாட்டைக்
கவரக் கள்ள வேஷம் போட்டு
இமாலயம் போலே புளுகி
இந்தியாவை யேப்பம் போட (ச)

வலியவம்பு சண்டை மூட்டுது—சீனு அதன்
வாலே மெள்ள மெள்ள நீட்டுது
புலிபதுங்கிப் பின்வாங்கிப்
போவதுதன் வெற்றிக்கென்று
எலிகளுக்கு தெரிந்திடுமா
இதுபோல்தான் அவர் கதையும் (ச)

தப்புக்கணக்கு போட்டு மதிக்குது—சீனுஅதன்
ஜனத்தொகைமே லென்று எதுக்குது
உப்புவொறப்பில் லாதபண்டம்
ஒன்றுக்குமு தவாதுலகில்
செப்பும் நமது வீரர்தொகை
சிறிதென்ருலும் காறமதிகம் (ச)

கொடுத்த வாக்கை காற்றில்விட்டது-சீனுயிப்போ
கூடுவிட்டுக் கூடுபாயுது
அடுத்து கெடுக்கும் சூட்சியிலே
அது யிறங்கி வந்து சும்மா
படுத்துறங்கும் யிந்தியாவைப்
பாய்ந்து முழுங்கப் பார்க்கிறது (ச)

இடங்கொடுத்தால் மடம் பிடுங்கிடும்—இனி;யிந்தியா
ஏமாந்தால் அது விழுங்கிவிடும்
அடம்பிடித்த சீனர்கள் மண்
ணுசைக்கின்று குழிதோண்ட
திடமிகுத்த நாமெல் லோரும்
திரண்டெழுவோம் போர்முனைக்கி (ச)

நேருவுக்குற் சாகமூட்டுவோம்-வீரத்தமிழனென்ற
நிலைமையைநாம் போரில் காட்டுவோம்
பாருக்குள் உயர்ந்த நமது
பாரதத்தைக் காக்க வின்று
வீறுகொண்டெழுந்தெதிர்த்து
விரட்டித் தள்ளுவோம் வெளியில் (ச)

சீனுவின் ஜாலவித்தை

'சாஞ்சா சாயிர பக்கமே...' என்ற மெட்டு

(பல்லவி)

சீனு! மூனுத்தனமாய்வினையம்புக்கிழுத்திட்டது—
தேனுய்ப்பேசி தானுய்ப் போரைநிறுத்திட்டது [ஏதோ.

(அ. பல்லவி)

ஆனாலுமது சும்மாயிருமல்
அரட்டி யுருட்டிதான் மீளுது—மேலும்
அது மாறுவேஷம் போட்டு மறைந்து
அடிக்குமுறையைக் கையாளுது (சீ)

(சரணம்)

மானங்காணி யென்றிமய
மலையிலும்வந் தாடுது
மக்மகான் யெல்லையையும்
மழுப்பிக்கதை பாடுது
வானளாவப்பேசி யின்னுமது
வக்றபுத்தியைத் தான் காட்டுது
வாலைமெள்ள மெள்ள நீட்டுது
வந்தவரை லாபமென்று வளைத்து சொந்தம்
[கூட்டுது (சீ)

நமக்கென்ன வென்று சும்மா
நாமிருக்கக் கூடாது
நாசக்கால ருட்புகுந்தால்
நம்மைப்புகழ் நாடாது
தமக்குவந்ததாய் நினைத்துச்சீன
சனியனை வெளியாக்கிடணும்—முழு
சமத்தையுங்கொண்டு தாக்கிடணும்
சத்தியநம் நேருக்குமுன் தாய்நாட்டைத்
[தேக்கிடணும் (சீ)

(சரணம்)

உடலில் ரத்தமுள்ளவரை
உயிர் தந்துப் போரிடணும்
ஒவ்வொருவ ருள்ளத்திலும்
ஊக்கமது வீறிடணும்
கடல்கொதித் தெழுந்ததுபோல்
கர்ஜனேயிட்டு மீறிடணும்—போர்
களத்தினில் முன்னேறிடணும்
கட்டுப்படா சீனர்களை வெட்டிவெட்டி சாய்த்திடணும் (சீ)

(சரணம்)

நரியதன் வாலைவிட்டு
கடலாழம் பார்த்ததுபோல்
நம்மையது பார்க்கிறது
நாமுஞ் சளையாததுபோல்
சரிநிகர்சம மாயெதிர்த்து
தகர்த்து வேட்டையாடணும்—பின்
தாங்கியவர் களோடணும்
தாய்க்கொடி யிமையமலை தனில் உயர்ந்தாடணும் (சீ)

சீனவின் பகல் கனவு.

தானனு தானன நன்னனு-தனன—தாளர்-ஆதி
தனன, தானதன நன்னனு-தானன—என்ற சந்தம்.

(பல்லவி)

தேசமே நமது லெக்ஷ்யம்—அதைத்
தெரிய வேண்டியது நிச்சயம்-பாரத (தே)
ஆசைவார்த்தைகளைப் பேசியதாலே நம்மி
லன்புகொண்ட தென்று யிருந்தோம்-அந்த

நேசபாவத்துக்கே மோசம்வந்ததால்
நிகரிலாது போர்க் கெழுந்தோம் (தே)

அகிம்சாக் கொள்கை யுடைய இந்தியர் போர்க்
கஞ்சுவாரென்றவர் மதித்தார்—அத
னலேயே யவர்கள் மக்மகான் யெல்லைக்
கப்பாலும் போரினிலே குதித்தார் (தே)

ஐநாஸ்தாபனத்தில் சீனாவையேற்பதற்கு
அத்தனை நாடும் யெதிர் மறுத்தது-ஆனால்
அதற்குப் பரிந்துநம திந்தியாவொன்றுதான்
அதனைச் சேர்க்கவுமென் றுரைத்தது (தே)

அப்படிநடு நிலைவகிக்கு மின்னாட்டுக்கது
எப்படித் துரோகம் செய்ய நாடலாம்-இனி
அறைக்கண முமிதனைச் சகிக்க முடியாது
அனைவர்களும் திரண்டு கூடலாம் (தே)

பொறுமைக்கு முண்டுவொரு எல்லையென்றதுபோல்
பொறுத்துப் பொறுத்துத்தான் போனோம்
போர போக்குச்சரி யில்லாததாலேயே [அவர்
போருக்கு ஆயத்த மானோம் (தே)

பதுங்கிப்பின் வாங்கல் பாய்ச்சலுக்கிடமென்ற
பயனையவர்கள் தெரியார்கள்-அந்தப் ..
படிப்பையவர்க்கு நாம் ஊட்டிவைத்தால் தான்
பாரத மக்களென் றுணர்வார்கள் (தே)

கொட்டினால்தான்தே ளென்று சொல்வார்கள்
குவலயத்தில் அதுபோலே—நாம்
கொட்டித்தான் காட்டி விரட்டணும் யெல்லைக்
கோட்டைத் தாண்டியப் பாலே (தே)

அடிக்க அடிக்க யின்னும் யேந்துதல் கூடாது
அடிக்கியடி கொடுக்க வேணும்—தமிழன்
யாரவன்! வீரம்! யிப்படியா! யென்றவர்க்
கப்பொழுது தான்மனதில் தோணும் (தே)

அப்பெரிய பிருட்டீசு ஆக்ஷியையேமுன்
ஆட்டிப் படைத்து வெளியாக்கினோம்—பாவம்
அதற்கிது யெம்மாத்திரம்சிறு சுண்டைக்காய்
அளவென்றே எதிர்த்து தாக்கினோம் (தே)

ஒன்று பட்டாலுண்டு வாழ்வென்றதை நாம்
உறுதியாய்ச் செயலில் காட்டுவோம்—
உண்மையை மாறின சீனராக்ஷதனை [சொன்ன
ஓடச்செய்து கொடி நாட்டுவோம் (தே)

வெற்றி நம்மதே.

தன்னை தன்னை தன்னை நன்னநன தாளம்—ஏகம்
தன்னநன னைநன ன—தான
தன்னநன னைநன ன—என்ற சந்தம்.

சைனா குரங்கு சும்மா மைனா பிடிக்குது
சளைத்து மயங்காதிங்க—அதன்
ஜம்பம் பலிக்காதுங்க—நமது
சத்தியமே ஜெயித்து வெற்றிக்கொடி நாட்டும்தில்
சந்தேசமே யில்லைங்க! (சை;

ஆரம்பத் தோல்வி வெற்றியின டிப்படை
அஞ்சாம லெதிர்த்திடணும்—நம்மை
அவர் கண்டு பின் வாங்கணும்—அவர்
அரட்டுருட்டுக்கு நாம் ஆளாகக் கூடாது
அனைவரும் திரண்டிடணும் (சை;

காலம் யிடம் நேரம் போதாமற் றுன்சிறு
கவலைக்கிடமானது-அந்த
காரணந்தான் பின்னனது-போரில்

காணும் வெற்றி தோல்வி மாறிமாறிக் கலந்தே
காட்டும் சகசம் அது (சை)

இரங்கக் கூடாது யிரங்கி விட்டோ மதை
இறுதி வரைப் பார்க்கணும்—வரும்
இடறெதையு மேற்கணும்—தமிழன்
எனவந்த நாம்நம் தாய்நாட்டுக்காக
எதையுந்தந்து காக்கணும் (சை)

உடலிலொரு சொட்டு யிரத்தமுள்ளளவும்
உயிர் தந்து போராடணும்—நாடு
ஒருமித்துடன் கூடணும்—அந்த
உலுத்தர்; நாமிங்கு வந்தது தவறென்று
உணர்ந்து வெகுண்டோடணும் (சை)

உணவு யில்லாமல் உயிர் விடத்துணிந்தது
உரமற்ற சீனப் படைகள்—வெளி
யுருட்டு தானவருடைகள்—வேறே [லென்ற
ஒன்றுமில்லே தன்னிடத்தில் ஜனத்தொகை மே
ஊக்கத்தில் போடும் நடைகள் (சை)

அமெரிக்கா பிருட்டன் நமக்குஉதவியாய்
ஆயுதந் தருகிறது—நமக்
கதில் பலம் பெருகுகிறது—இன்னும்
அதுபோலே கொடுக்க மேலும்பல நாடுநமக்
காதரவை யளிக்கிறது (சை)

நேரு ஜிக்கும் நேதாஜி போசுக்கும் ஜே யென்று
நெருங்கியுடல் துடிக்கணும்-அந்த [சொல்லி
நீச்சனே யின்றே பொடிக்கணும்-உண்மை
நிலைகெட்ட துரோகிகளின் மண்ணைசையைப்புதைக்க
நீளக் குழி தோண்டணும் (சை)

ஆழந் தெரியாமல் காலைவிட்ட சீறு

(‘கொஞ்சுங்கிளியான என்னை’ என்ற மெட்டு)

அட்டமத்திலே சனியன் தொட்டிருப்பதாலே நம்முன்
ஆடுது தலைகீழாக சீறு சீறு
அதற்குப்பயந்து துடைநடுங்கிச் சாவதுயிந்த
அகண்ட பாரதமக்கள் தானு தானு

வெட்டுஒன்று துண்டுரெண்டா யிட்டுபலியாடு மிந்திய
வீரமக்களை வெல்லவா சீறுசீறு
வெட்டியில் பகற்கனவு கண்டு வெள்ளோட்டம் பார்த்து
வேதையடையுதிப்போ தானுதானு

கொல்லைப்பக்கம் வந்திமய யெல்லையில் கால்வைத்த
கொன்றுகுவியாமல் விடலாமா! ஆமா [மட்டும்
கூனக்கிழவி முதுகில் குத்தியோடுகின்ற கோழை
கூட்டத்திலே பிறந்த நாமாநாமா

எத்தகைய தியாகத்திற்கும் சித்தமாய் தலைகொடுத்து
எதிர்த்துப்போராடி வெற்றிபெறுவோம் [பெறுவோம்
ஈனச்செயல்கொண்ட அந்த ஞானசூன்ய ராக்ஷதரின்
இடரொழிக்க உயிரைத் தருவோம் தருவோம்

சைனுவின் வாங்குதென்றும் சங்கடந் தொலைந்த
சந்தோஷங் கொள்ளுவது தீதுதீது [தென்றும்
சற்றுமீவிரக்க மில்லா தீயர்கூட்ட மென்றேனும்
தாக்க முனைந்திடுந்தப்பாது சூது!

நம்பிக்கைத்துரோகம் விளைத்து நம்நாட்டையாக்ரமித்த
நாசக்காலரை விட்டிடில் மோசம்மோசம்
நம்தலைமை நேருசொல்லை நாம் கடைப்பிடித்து நிற்க
நமக்குவேணு முளத்தில் ரோசம் ரோசம்!

அலக்ஷியம் கூடாது

('நான்பேச நினைப்பதெல்லாம்' என்ற மெட்டு)

இனிதான் நாம் ஜாக்கிரதையா யிருந்தாகவேணும்
எதிராளிநமைக் கண்டு வெறுண்டோட வேணும்
தனியேநம் தமிழ்நாடு தழைத்தோங்க வேணும்
சளையாநம் உழைப்பாலே விளைவேற வேணும்

தன்கையே தனக்குதவி யெனக்கொள்ள வேணும்
தனியாரை யெதிர்பார்க்கும் குறைநீங்க வேணும்
பொன்னோடு பொருளாலே முன்னேற வேணும்
போர்க்கான வையை நாமே சேர்த்தாக வேணும்

கெடுப்பார்சொல்பேச்சைக் கேளாதிருக்க வேணும்
கௌரவப் புகழால்நம் நிலை யோங்க வேணும்
எடுப்பார்கைப் பாவையா யிராதிருக்க வேணும்
என்னுடும் நமக்கான துணையாக வேணும்

நடுவான நிலைகொண்டு நாம் வாழவேணும்
நாமார்க்கும் படியாத குடியாக வேணும்
படுபாவச் செயல்நீங்கி பலன்காண வேணும்
பகைத்தோரை எதிர்த்தாட படைசேர்க்கவேணும்

எதுவாயினும் இமயத்தை விடோம்

'போனால் போகட்டும் போடா' என்ற மெட்டு

ஆனது ஆகட்டும் பார்ப்போம்—அத
னாலெதுவரினும் நாம் உயிர்கொடுத் தேற்போம்

போனது திரும்ப வந்து யெல்லையிலே
போர்க்கருவிகளை மிகவாக
ஆனவரையிலுங் குவித்துவருகுதே
அதுகள் யாவும் எதற்காக!

அதற்கு நாமஞ்ச வேணுமென்று—படை
யதிகம் அவரிட மிருக்கு தென்று!—அல்ல
ஆயுத பலம்நமக் கில்லை யென்று!—ஆ

இமயமலை முதல் குமரிமலை வரை
இந்திய நாடெனத் தெரிந்திருந்தும்
எப்படியவர்நம் எல்லைக்குள் வரலாம்
எல்லாவிஷயமும் புரிந்திருந்தும்

ஏகாதிபத்திய கொடு வெறியா!—அவர்
ஈனக் குணத்தின் அறிகுறியா!—நமை
இணைந்தபல் நாட்டுக்கு மிதுசரியா!—ஆ

சனிகொண்ட நாறைக் கெளுத்தியை விழுங்கி
தவித்துப்பதறிய கதை போலே!—
சைனு; தானே வலி சண்டைக்கிழுத்து
தயங்குவதெதற்கோ வீணாலே!—அதன்

சாகசப் புதிற்கிடந் தரமோட்டோம்!—உயிர்
த்தியாகஞ்செய் வோம்பயப்படமாட்டோம்!
—பிறந்த
தாய்த்தமிழ் நாட்டைவிடமாட்டோம்!—ஆ

சாகிறவனுக்கு சமுத்திரமுழங்கால்
தண்ணீரளவாம் அதுபோலே!—முன்
போவதற்கஞ்சா வீரத்தமிழர் நாம்
போவோமெழுங்கள் துணிவாலே!

பொல்லாச் சீனரின் வெறுங்கூட்டம்!—பெரும்
போரில் வாளுக்குப் பயந்தோட்டம்—நம்முன்
செல்லாதவரின் போராட்டம்!—ஆ

இது; கவிஞன் தந்த காணிக்கை

மன்னாதி மன்னர்கள் வாழ்ந்தநம் நாட்டை மண்
ணசை கொண்டு
இன்றளை திர்த்திடும் சீனனை விரட்டற்
கெலாந் திரண்டு
பொன்னுப ரணமுந்தங் கக்குவிய லுந் தந்து
போர்க் கெழுவதால்
என்னால் முடிந்த காணிக்கை போர்
முரசு யிதை ஈட்டினேனே

ஆக்கியோன்:
தமிழ்நாடகத் தலைமைப்பேராசிரியர்
ஸ்ரீலஸ்ரீ T. T. சங்கரதாஸ்வாமி அவர்களின்
முதுமாணவன், தேசியக்கவி, செந்தமிழ் சந்தச்சரபம்
இராஜா ஷண்முகதாஸ்
மதுரை.

223
5-4

வந்தேமாதரம்!

ஜெகநாத் பிரஸ், 9, பூக்காரசந்து, மேலமாசிவீதி, மதுரை.